**IN THE COURT OF II JUDGE, SMALL CAUSES, CHENNAI**

---

**M.C.O.P.No.3568, 3569 and 3886/2023**

Deposition of Witness : PW 1
Name : Ashtalakshmi (**M.C.O.P.No.3568/2023)**
Husband Name : Thirumal
Age : 41 years
Designation : --
Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 17th day of February, 2025.

---

**முதல் விசாரணை –**

நான் **M.C.O.P.No.3568/2023** மனுவின் 1ம் மனுதாரர் ஆவேன்.எனக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும் மேலும் M.C.O.P.No.3886/2023 ல் உள்ள என்னுடைய மகன் தரன் என்பவருக்காகவும் என்னுடைய தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன், அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும், அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதனை என்னுடைய முதன்மை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

| Sl.No. | Descriptions | Nature of documents | Remarks |
|---|---|---|---|
| 1 | First Information Report | Photocopy | Ex.P.1 |
| 2 | Rough sketch | Photocopy | Ex.P.2 |
| 3 | Post mortem certificate | Online copy | Ex.P.3 |
| 4 | Death certifictate | Online copy | Ex.P.4 |
| 5 | Form B | Photocopy | Ex.P.5 |
| 6 | Form D | Photocopy | Ex.P.6 |
| 7 | IT return | Photocopy | Ex.P.7 |
| 8 | Pan card of the deceased | Photocopy | Ex.P.8 |
| 9 | Transfer certificate | Photocopy | Ex.P.9 |
| 10 | Legal heir certificate | Online copy | Ex.P.10 |

| | | | |
|---|---|---|---|
| 11 | Final report | Photocopy | Ex.P.11 |
| 12 | Aadhar card | Photocopy | Ex.P.12 |
| 13 | Bank passbook | Photocopy | Ex.P.13 |
| 14 | Pan card | Photocopy | Ex.P.14 |
| 15 | AR copy of petitioner in O.P. No.3886/2023 | Photocopy | Ex.P.15 |
| 16 | Discharge summary | Original | Ex.P.16 |
| 17 | Discharge summary | Original | Ex.P.17 |
| 18 | Medical bills | Original | Ex.P.18 |
| 19 | Aadhar card | Photocopy | Ex.P.19 |
| 20 | Bank passbook | Photocopy | Ex.P.20 |

எனது சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக கேட்டுக்கொள்கிறேன்.

**2 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. விபத்து குறித்து நான்தான் புகார் கொடுத்தேன். விபத்தின்போது என் கணவர் மற்றும் எனது மகன் தரன் ஆகியோர் காரில் பயணம் செய்துக்கொண்டிருந்தனர். கார் மோதிதான் விபத்து ஏற்பட்டது என்றால் லாரி சாலையின் நடுவில் நின்றுக்கொண்டிருந்ததால்தான் விபத்து ஏற்பட்டது. அந்த லாரி அனைத்து பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொண்டுதான் சாலையின் ஓரத்தில் நின்றுக்கொண்டிருந்தது என்றும், கார் ஓட்டுநரின் அஜாக்ரதையால்தான் விபத்து ஏற்பட்டது என்றும், அதனால் 2 வது எதிர்மனுதாரரை பொறுத்து மனுத்தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. என் கணவர் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் விற்கும் கடையை நடத்தி வந்தார்

என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை தாக்கல் செய்துள்ளேன். அந்த கடையில் பொருட்கள் வியாபாரம் செய்து வருமானம் ஈட்டப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வருமான வரிக்கணக்கை மட்டும் வைத்து எவ்வளவு வருமானம் அந்த கடையில் வந்தது என்பதை கணிக்க முடியாது என்றால் சரியல்ல. 2020 – 2021ற்கான வருமான வரிக்கணக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் அது கொரோனா நோய்த்தொற்று காலகட்டம் என்பதால் தாக்கல் செய்யவில்லை. ம.சா.ஆ.7 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் வீட்டுக்குடித்தனம் செய்கிறேன். என் கணவர் நடத்திவந்த கடையின் வருமானத்தை நம்பிதான் நாங்கள் இருக்கிறோம் என்றால் என் கணவர் இறந்தபிறகு அந்த கடையை மூடிவிட்டோம். என் கணவர் நடத்திவந்த கடையை தற்போதும் நடத்தி வருமானம் பெற்றுவருகிறோம் என்றும், அதனால் வருமான இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் நாங்கள் கேட்டுள்ள இழப்பீடு தொகை மிகவும் அதிகம் என்றால் சரியல்ல.

எனது மகன் தரன் என்பவருக்கு அடிபட்டவுடன் முதலில் வாலாஜாபேட்டை அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை எடுத்தோம்,

அதன்பிறகு இராணிப்பேட்டை CMC மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம், அங்கு 13 நாட்கள் சிகிச்சை வழங்கி மேல் சிகிச்சைக்காக வேலூர் CMC மருத்துவமனை அனுப்பிவைத்தார்கள். விபத்தின்போது எனது மகனுக்கு 12 வயது. 3.7.2023 க்கு பிறகு எனது மகனுக்கு தொடர்சிகிச்சை எடுத்துக்கொண்டதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தொடர்சிகிச்சை எடுக்காததால் எனது மகனுக்கு ஏற்பட்ட காயங்கள் முழுவதுமாக குணமாகிவிட்டது என்றால் சரியல்ல. தற்போது எனது மகன் 9 வது வகுப்பு படித்து வருகிறான். ம.சா.ஆ.18 மருத்துவ இரசீதுகளில் உள்ள தொகைகள் இரண்டு முறை காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சில இரசீதுகளுடன் பரிந்துரை கடிதம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், அதனால் அந்த இரசீதுகள் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றால் சரியல்ல. என் மகனுக்கு நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** – இல்லை.

Sd./
Signature of witness

Taken down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by him/her to be correct.
Date: 17.2.2025

Sd./
II Judge
Court of Small Causes, Chennai